# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இறப்பர் மீளநடுகை மானியம் (திருத்தச்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, மே மாதம் 26 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2006 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இறப்பர் மீளநடுகை மானியம் (திருத்தச்) சட்டம்

[2006 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]

ச. வ. ஓ — 08/2005

## இறப்பர் மீளநடுகை மானியச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம் (அத்தியாயம் 437)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இறப்பர் மீளநடுகை மானிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம். சுருக்கப்பெயர்.

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீளநடுகை மானியச் சட்டத்தின் பிரிவு 7 இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :— 437 ஆம் அத்தியாயத்தின் 7 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"தீர்வை விதிப்பனவு. **7.** (1) தீர்வையொன்றானது, இறப்பர் கைத்தொழில் தொடர்பில் முழுமையானதொன் றானதாகக் காணப்படும் நிபந்தனைகளை கருத்திற் கொண்டு வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் தீர்மானிக்கக்கூடிய வாறான அத்தகைய வீதத்தில் விதிக்கப்பட்டு அறவிடப்படல் வேண்டும். அவ்வாறு தீர்மானிக்கப் பட்ட தீர்வையானது அடையாளம் காணப்பட்ட இறப்பர் உற்பத்திகள் தொடர்பில் இதனகத்துப் பின்னர் தரப்பட்டுள்ளவாறான விதத்திலும் அந்தந்த நேரத்திலும் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் கட்டளையை ஆக்கும் போது, அமைச்சர்

(அ) விடயத்திற்கேற்ப —

(i) கட்டி இயற்கை இறப்பர் ;

(ii) செயற்கை இறப்பர் ; அத்துடன்

(iii) இறப்பர் அடிப்படையிலான உற்பத்திகளின்,

இறக்குமதி தொடர்பில் அத்தகைய உற்பத்தியின் பெறுமதி மீது அல்லது அத்தகைய உற்பத்தியின் இறப்பர் உள்ளடக்க வீதம்மீது கணிக்கப்பட்டு விதிக்கப்படவேண்டியதான தீர்வை வீதத்தைத் தீர்மானித்தல் வேண்டும். அத்துடன் அவ்வாறு கணிப்பிடப்படும் தீர்வை இறக்குமதி செய்யும் நேரத்தில் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும் ;

(ஆ) (i) கட்டி இயற்கை இறப்பர் ;

(ii) உலர்ந்த இறப்பர் ; அத்துடன்

(iii) ஏற்றுமதிக்காக உற்பத்தி செய் யப்பட்ட இறப்பர் அடிப்படையிலான உற்பத்திகளின் ,

ஏற்றுமதி தொடர்பில், அத்தகைய உற்பத்தியின் இறப்பர் உள்ளடக்க வீதத்தின் மீது கணிப்பிட்டு விதிக்கப்பட வேண்டியதான தீர்வை வீதத்தைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு கணிப்பிடப்படும் தீர்வையானது விடயத்திற்கேற்ப, இறப்பர் உற்பத்தியின் உற்பத்தியாளரால் கட்டி இறப்பர் கொள்வனவு செய்யப்படும் நேரத்தில் அல்லது ஏற்றுமதி செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும் ;

(இ) உள்நாட்டு நுகர்விற்காக உற்பத்தி செய்யப்படும் இறப்பர் அடிப்படையிலான உற்பத்தி கள் தொடர்பில் அத்தகைய உற்பத்தியின் இறப்பர் உள்ளடக்க வீதத்தின் மீது கணிப்பிடப்பட்டு விதிக்கப்படவேண்டிய தீர்வை வீதத்தைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு கணிப்

பிடப்பட்ட தீர்வையானது நாட்டினுள் ளான கொள்வனவின் நேரத்தில் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தீர்வையாக சுமத்தப் பட்ட தொகையானது அமைச்சரால் வர்த்தமானி யில் வெளியிடப்பட்ட கட்டளையினால் வேறுபடுத் தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது 3 ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன் றானது, அத்தகைய கட்டளை வர்த்தமானியில் வெளியிடப்படும் தேதியிலிருந்து செயற்பாட்டிற்கு வருதல் வேண்டும். ஒவ்வோர் கட்டளையும், அது வர்த்தமானியில் வெளியிடப்படும் தேதியிலிருந்து நான்கு மாத காலாவதிக்கு முன்பாக அங்கீகாரத் துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப் படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் மறுக் கப்பட்ட ஏதேனும் கட்டளைகள் அங்கீகாரம் மறுக் கப்பட்ட தேதியிலிருந்து அதன்கீழ் இதற்கு முன் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்படுவ தாகக் கருதப்படல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் ஒழித்து விடப் படும் ஏதேனும் கட்டளையின் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(6) மேற்சொல்லப்பட்ட உட்பிரிவுகளின் நியதிகளின்படி கணிப்பிடப்பட்டு செலுத்தப்பட்ட தீர்வையானது 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(7) இந்தப் பிரிவின் நியதிகளின்படி சேகரிக்கப்பட்ட விதிப்பனவின் மொத்தத் தொகையானது, இறப்பர் அடிப்படையிலான சிறிய நடுத்தர உள்ளூர் கைத்தொழில் முயற்சியின் அபிவிருத்திக்கும் மற்றும் இறப்பர் பயிர்ச் செய்கைக்கும் 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினதும் இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்துடனான கலந்துரையாடலுடன் உபயோகப்படுத்தப்படுதல் வேண்டும்.

(8) ஐயத்தைத் தவிர்ப்பதற்கு, இப்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வெல்லா இறப்பரின் தலைப்புகளுக்கு ஏற்புடையதாகுமோ அவ்வெல்லா இறப்பரின் தலைப்புகள் 1991 ஆம் ஆண்டு ஒற்றோபர் 1 ஆம் தேதிய 682/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 91/11 ஆம் இலக்க (ஆர்பிஒ) சுங்க அறிவித்தலில் எவ்.எச்.எஸ். கோவை இலக்கத்தின்கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ளனவோ அவ்.எச்.எஸ். கோவை இலக்கம் தொடர்பில் அல்லது எந்த வேறு ஏதேனும் கோவை இலக்கம் அதற்கு பதிலிடப்படக் கூடுமோ அத்துடன் ஏதேனும் எதிர்கால தேதியில் வலுவுக்கு வருதல் வேண்டுமோ அவ்வேறு கோவை இலக்கம் தொடர்பில் அடையாளம் காணப்படலாம்.

*தீர்வையின் மிகையை மீளளிப்புச் செய்தல்.*

7அ. (1) ஆளெவரும் அவரால் மிகையாகச் செலுத்தப்பட்ட ஏதேனும் தீர்வையின் மீளளிப்பொன்றுக்கு இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி இறப்பர் மீளநடுகை மதியுரைச் சபைக்கு, அத்தகைய மீளளிப்பைச்

செய்யலாமா என விதப்புரையொன்றைச் செய்யுமாறு சபைக்கு வேண்டுகோள்விடுத்து விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.

(3) தீர்மானிக்கப்பட்டவாறான மூலப்பிரமாணத்தின் அடிப்படையில் இறப்பர் மீளநடுகை மதியுரைச் சபையின் விதப்புரையின்மீது இச்சட்டத்தின் கீழ் அத்தகைய ஆளுக்கு விதித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தால் மீளளிப்புச் செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டவாறான தொகையை மீளளிப்பதற்கு அமைச்சர் கட்டளையிடலாம்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (அ) வை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துதல் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(அஅ) கட்டி இயற்கை இறப்பர் மற்றும் இறப்பர் அடிப்படையிலான உற்பத்திகளின் ஏற்றுமதியாளர்களையும் இறக்குமதியாளர்களையும் அத்துடன் இறப்பர் அடிப்படையிலான உற்பத்திகளின் உற்பத்தியாளரையும் பதிவு செய்வதற்காக திட்டமொன்றைத் தாபித்தல் ;

(அஅஅ) எம்முறையிலும் விதத்திலும் இறப்பர் மற்றும் இறப்பர் அடிப்படையிலான உற்பத்திகளில் உள்ளடங்கியுள்ள இறப்பரின் முறையும் விதமும் அத்துடன் அதன் உள்ளபடியான இறப்பர் வீதமும் வெளிப்படுத்தப்படல் வேண்டும் ;".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 10 அ எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் பிரிவு 10அ என்றாற் போன்று பயனுறுதலும் வேண்டும் :—

"*தவறுகள்.*

10அ. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதிகளுடன் முரண்படுகின்ற அல்லது இணங்கத்

தவறுகின்ற ஒவ்வோராளும் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு வருடத்திற்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது, அதன் "கட்டி இயற்கை இறப்பர்" எனும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை அதிலிருந்து நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*வர்த்தமானியில் அறிவித்தல் ஒழிக்கப்படல்.*

**6**. ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 40 ஆம் இலக்க, ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் 2004 ஆம் ஆண்டின் ஒற்றோபர் 15 ஆம் தேதிய 1362 ஆம் இலக்க, விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளை இத்தால் ஒழிக்கப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**7**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*